
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 மே 200




வெளியிடுவோர்

## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

### தொடர்பு முகவரி


**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27,

காங்கயம் - 638 701. இந்தியா.


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...


1. ஆசிரியர் உரை — 1
2. சுவிசேஷ அழைப்பு — 9
3. பெண்கள் பகுதி — 13
4. ஏலகிரி முகாம் 2003 — 16
5. வேனிற்கால வேதாகம முகாம் பற்றி — 20
6. வாலிபர் பகுதி — 23
7. சிறுவர் பகுதி — 26
8. பிலிப்பியர் ஒரு கண்ணோட்டம் — 28
9. எது புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் — 29

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.17 May- 2003 Issue-4


ஆசிரியர் உரை

# "தவணை முறையில் தன்னை விற்றுப் போட்டவன்"

நாம் வாழும் இந்தக் காலம் "தவணை முறையின்" காலம். எல்லாமே தவணையில் கிடைக்கிறது. தேவையானது மாத்திரமல்ல, தேவையில்லாததும் கிடைக்கிறது. கிடைக்கிறது என்பதைக் காட்டிலும், "தவணை முறைத் திட்டம்" என்ற பெயரால் தலையில் கட்டப்படுகிறது என்பது இன்னும் பொருத்தமாக இருக்கும். இந்நாட்களில் மிகப்பிரசித்தி பெற்று விளங்கும் இத்திட்டம் பற்றி எல்லோருமே நன்கறிவோம். மக்களுடைய வரைமுறையற்ற பொருளாசைக்கு சளைக்காமல் தீனிபோட்டு, தகுதிக்குப் புறம்பான டாம்பீக வாழ்க்கைக்கு இத்திட்டம் வெகுவாக ஈடு கொடுக்கிறது. இதில் சிக்கிய அநேகர், தங்களை நிரந்தர கடனாளிகளாக மாற்றிக் கொள்வதோடல்லாமல், தங்களுடைய நிம்மதியான வாழ்வுக்கு தாங்களே குழியும் வெட்டிக் கொள்கின்றனர்.

எப்படியோ, "பொருட்கள்" தவணை முறையில் விற்கப்படுவதும், வாங்கப்படுவதும் ஜனங்களுக்கு பழக்கப்பட்ட ஒன்றாகவும், சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் ஆகிவிட்டது. ஆனால், ஒரு "மனிதன்", தன்னையே தவணை முறையில் விற்ற சம்பவம் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. ஒருவேளை, எஜமானர்கள் அடிமைகளை விற்றதும், வாங்கியதும் சரித்திரத்திற்கு புதிரானதல்ல. ஆனால், பகட்டோடு வாழ்ந்த ஒரு "ராஜா" இங்கே விற்கப்பட்டுள்ளான். அதுவும் எப்படி? தன்னைத் தானே விற்றுள்ளான். அதுவும் தவணை முறையில். இவனைத் "தவணை முறையின் தந்தை" எனச் சொன்னாலும் தவறில்லை என எண்ணுகிறேன். யார் அந்த முட்டாள் என்கிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள், தெரிந்து கொள்ளலாம்.

ஒருவகையில், தவணைமுறை என்பதே கொஞ்சம் இழுக்கானது. ஆனால் இந்தப் படுபாதகன், இழுக்கான இந்தத் திட்டத்திற்கு மேலும் இழுக்கைத் தேடிக் கொடுத்துவிட்டான். எப்படியெனில், தவணை முறைத் திட்டத்தின் கீழாக விற்பவர்களுக்குத் தான் எப்பொழுதுமே லாபம். ஆனால், இவனுக்கு தன்னை விற்றதில் மிகப்பெரிய நஷ்டம். அப்படியானால், இந்தத் திட்டத்திற்கு இவன் செயல் இழுக்கை தேடித் தந்தது, என்று சொல்வது நியாயம் தானே! சொல்லுங்கள். அவனைப் பற்றி வேத வசனம் சொல்லுகிறதைக் கவனியுங்கள். **"அப்பொழுது ஆகாப், எலியாவை நோக்கி : என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா? என்றான்.... அதற்கு அவன் : கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப் போட்டாய்"** என்றான். (II ராஜா.21:20). இவன் தன்னை தவணை முறையில் விற்றதாக இங்கே எதுவுமே இல்லை யென்கிறீர்களா? இல்லையில்லை, தவணை முறையில் தான் தன்னை விற்றுள்ளான் என்பதற்கு ஆதாரம் தருகிறேன், தொடர்ந்து படியுங்கள்.

அதற்கு முன்பாக, இந்த "ஆகாப்" பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம். சாலமோன் ராஜாவுக்குப் பிறகு இராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிரிந்து, வடக்கு ராஜ்யம் "இஸ்ரவேல்" என்றும், தெற்கு இராஜ்யம் "யூதா" என்றும் அழைக்கப்பட்டது. இந்த ஆகாப், வடக்கு இராஜ்யத்தை ஆண்ட ஏழாம் மன்னன். 22 ஆண்டுகள் அரசாண்டான், தகப்பன் பெயர் உம்ரி. ஆகாப் ராஜா என்றாலே, அய்யோ அவனா! என்று சொல்லுமளவிற்கு, இவனுடைய நாட்கள் இருந்தாலும், இவனிடம் ஒரு அரசனுக்குண்டான சில அத்தியாவசிய தகுதிகளும் இருக்கவே செய்தது, பராக்கிரமம், சமயோசிதம், ஐசுவரியம் ஆகியவையும் இவனுக்குச் சம்பந்தமில்லாததாக இருக்கவில்லையென்பதை நாம் படிக்க முடியும்.

இவனுடைய நாட்களில், இஸ்ரவேலை தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டே இருந்த **சீரியரை எதிர்த்து பல தடவை யுத்தம் செய்தான்.** ஒரு வேளை தன் முயற்சியில தோல்விகள் பல கண்டாலும், துவண்டு போகாமல், மீண்டும் மீண்டும் போரிட்டு, சீரியரை வென்று, ராஜாவாகிய பெனாதாத்தை சிறைபிடித்தான். (I ராஜா. 20 : 2). பிறகு ஒருமுறை ஏற்பட்ட யுத்தத்தில் மரித்துப் போனான் (I ராஜா, 22, 31). இச்சம்பவங்கள் இவனுடைய பராக்கிரமத்துக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

அடுத்து, இவனுடைய சமயோசிதத்துக்கு ஆதாரமாக, **இவன் செய்து கொண்ட உடன்படிக்கைகளைக் காட்டலாம்.** உடன்படிக்கைகள் இவனுக்கு தற்காலிக வெற்றியைத் தான் தந்தது என்பது வேறு விஷயம். ஆனால், சந்தர்ப்பங்களை அவன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டதை நாம் சாதாரணமாகக் கருதமுடியாது. முதலாவது, சிறைபிடித்த சீரிய ராஜாவாகிய பெனாதாத்துடன் ஒரு "உடன்படிக்கையை" ஏற்படுத்திக் கொண்டு அவனை விடுதலையாக்கினான். (I ராஜா. 20:34). அடுத்து தன்னுடைய திருமணத்தின் மூலம், சீதோனின் துறைமுகங்களை பயன்படுத்தும் வழியுண்டாக்கி, தேசத்தின் பொருளாதார நிலை வலுப் பெற வகை தேடினான். இன்னும், யூதாவின் ராஜாவாக இருந்த யோராமோடு சமாதான உடன்படிக்கை செய்து, தன் மகளை அவனுக்குக் கொடுத்தான். (II ராஜா.8 : 18).

ஐசுவரியத்தைப் பொறுத்த அளவில், **ஆகாபுக்கு தந்தத்தாலான மாளிகை இருந்தது** (I ராஜா. 22 : 39). புகழின் உச்சியில் இருந்த தாவீதும், ஐசுவரியத்தின் எல்லைக் கோட்டை நெருங்கிவிட்ட சாலமோனும் தங்களுக்கு கேதுரு மரங்களாலான அரண்மனைகளையே கட்டியுள்ளனர். (II சாமு.7:21, I ராஜா. 10 : 23). இவனுக்கோ "தந்தத்தாலானா அரண்மனை". எவ்வளவு ஐசுவரியம் பாருங்கள்!

ஆனால், ஐசுவரியம், புத்தி, திறமை, பராக்கிரமம் ஆகிய அனைத்தும் இருந்தும் தன்னுடைய ஆன்மீக வாழ்வில் படுதோல்வி கண்டு, தோற்றுப் போனவர்களின் பட்டியலில் வெட்கமில்லாமல் தன்னையும் இணைத்துக் கொண்டான். ஐயோ, பாவம் என்று சொல்வதற்குக் கூட இடம் கொடுக்க மனம் மறுக்கிறது.

இவன் நாட்களில் இருந்த ஆன்மீக நிலை பற்றியும் சிறிது கூறுகிறேன். மகா தீர்க்கனாகிய எலியா இந்த ஆகாபின் நாட்களில் தான் வாழ்ந்தான். இந்த எலியா, மறுரூபமலையில், இயேசுவோடு தோன்றி, அவருடைய மரணத்தைக் குறித்து, விவாதித்தவன் (லூக். 9 : 30, 31). இவ்வளவு பெரிய தீர்க்கனாகிய எலியாவின் மேன்மையை உணராமல், அவனின் ஆலோசனைகளைப் புறம் தள்ளி, ஒரு கட்டத்தில் அவனைக் கொல்வதற்கும் தன் மனைவிக்கு அனுமதி கொடுத்தான். பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு ராஜமரியாதை கொடுக்கப்பட்டது. (I ராஜா. 18 : 19). அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு, கர்த்தரின் தீர்க்கதரிசிகள் கொல்லப்பட்டார்கள். (18 : 4). எலியாவுக்கும், பொய்த் தீர்க்கதரிசிகள் 450 பேருக்கும் நடந்த ஆன்மீக யுத்தமும் இவன் நாட்களில் தான் நடந்தது. (I ராஜா. 18).

வேத பிரமாணத்திலிருந்தும், தேவ நீதியிலிருந்தும் பட்டவர்த்தனமாய் விலகி, வெகு தூரம் போய், திரும்பி வரமுடியாத எல்லையைத் தொட்டுவிட்டான் என்பதற்கு வேறொரு அசைக்க முடியாத சான்றுதான். ஏழை மனிதனாகிய நாபோத்தின் கையகல நிலத்திற்கு ஆசைப்பட்டு, அதை ராஜஸ்தானத்திற்கு சற்றும் சம்பந்தமில்லாத வழி முறைகளால் பெற்றுக் கொண்ட சம்பவமாகும். ( I ராஜா 21 : 1 - 16). இவ்விஷயத்தில், அவன் மனைவியின் முந்தானைக்குப் பின் ஒளிந்து கொண்டு, தான் ஒரு கேவலமான மனிதன் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தான்.

இதற்குப் பிறகு தான், தேவன், எலியாவைக் கொண்டு, **ஆகாபே, "உன்னை விற்றுப் போட்டாய்"** என்று சொன்னார். எடுத்த எடுப்பில் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல அவைகள். ஒருவேளை ஆகாபின் ஆரம்ப நாட்களில் அவனைப் பார்த்து, நீ ஒரு காலத்தில், ஒரு கட்டத்தில் உன்னை விற்றுப் போடுவாய் என்று யாராவது சொல்லியிருந்தால், அவன் அதை ஒத்திருப்பானா? அது மாத்திரம் ஒரு போதும், நடக்கவே நடக்காது என்று அடித்து, ஆணித்தரமாகச் சொல்லியிருப்பான். ஆனால் நடந்தது என்ன? **அவன் தன்னை விற்றுப் போட்டான்.**

ஆகாப், தவறுகள் பல செய்திருந்தாலும் கூட, **இறுதியில் தான், அவன் தன்னை விற்றுப் போட்டான்** என்று சொல்லியிருக்கிறபடியால், அவன்

தன்னை கொஞ்ச, கொஞ்சமாகத் தான் விற்றிருக்கமுடியும். அப்படித்தானே அப்படியானால், அவன் தன்னை **தவணை முறையில் விற்றுப் போட்டான்** என்று சொல்லலாம் தானே. சரி, அவன் தன்னை குறைந்தது மூன்று தவணைகளில் விற்றிருக்க முடியும் என்று நாம் காணலாம்.

## I முதல் தவணை - திருமணம்

மூன்று தவணைகளில், முதல் தவணை அவனுடைய திருமண உறவுதான். இவனுடைய தோல்விக்கு இது தான் முதல்படி. புற ஜாதிகளுக்குள்ளாக மண உறவு வைத்துக் கொள்ளக் கூடாதென்ற தேவ கட்டளையைப் பார்க்க இவனுடைய கண்கள் மறுத்து விட்டது. இவனுக்கிருந்த அறிவும், ஆற்றலும் இவனுடைய நன்மைக்கு பயன்படவில்லை. ஆகாத உறவு ஆபத்தானது என்பதற்கு அநேக ஆதாரங்கள் உண்டு. பலசாலியாகிய சிம்சோனுக்கு ஏற்பட்ட அவமானமும், ஞானியாகிய சாலமோனுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியும் ஆகாத உறவின் பிரதிபலிப்புகளே.

மனைவி, கணவனுக்கு "ஏற்றவளாக" இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். ஆகவே தான், ஆதாமுக்கு "ஏற்ற துணையாக" ஏவாளைக் கொடுத்தார். (ஆதி.2 : 18), மனைவி சரீரப் பிரகாரமாக மாத்திரம் ஏற்றவளாக இல்லாமல், மன ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் ஏற்றவளாக இருக்க வேண்டுமென்பதே இதன் பொருள். ஆனால், ஆகாப் தேவனின் இந்த திட்டத்தை ஆடிக் காற்றிலே பறக்க விட்டு விட்டு, தன் இஷ்டம் போல் நடந்து கொண்டான்.

இன்றைக்கு மனிதர்கள் திருமணத்தின் போது பயன்படுத்துகிற அதே அளவுகோலை அவனும் பயன்படுத்தினான். தகுதி, அந்தஸ்து, அழகு, வருமானம், லாபம் என்று இந்த வகையிலே பார்த்தானேயொழிய, அவளின் பக்தியைப் பரிசோதிக்கவில்லை. யெகோவாவுக்கும் அவளுக்கும் இருக்கிற உறவு என்னவென்று பார்க்கவில்லை. கர்த்தர் இவனுக்குக் கொடுத்திருந்த அறிவை ஒரு துளி பயன்படுத்தியிருந்தால் கூட இவன் தன்னை ஓரளவாவது காப்பாற்றியிருக்கலாம். ஆனால் இவனோ, படுபாதாளத்தில் வலியப் போய் தலைகுப்புற விழுந்தான். ஆம், யெகோவாவுக்கு சற்றும் சம்பந்தமில்லாத, மெய் வணக்கத்தை அறிந்திராத ஒருத்தியை மனைவியாக்கிக் கொண்டான். இவளெல்லாம் ஒரு பெண்ணா! என்று உலகம் இன்று இடித்துரைக்கிறவர்களையெல்லாம் பார்த்து, எனக்கு இணையாக முடியுமா? என்று இன்னமும் இவள் சவால் விட்டுக் கொண்டுள்ளாள் என்று சொன்னால், அது மிகையாகாது.

யேசபேலாகிய இவளுடைய குடும்பப் பின்னணியைக் கொஞ்சம் கேட்டிருந்தால் கூட இவன் தன்னை தற்காத்திருக்கலாம். இவளுடைய தகப்பனாகிய ஏத்பாகால் ஒரு ராஜாவாக மாத்திரமல்லாமல், பாகாலுக்கு பூசாரியாகவும் இருந்துள்ளான். இவனுடைய பெயரிலேயே "பாகால்" என்ற வார்த்தை ஒட்டியிருக்கிறதென்றால், இவனின் பாகால் பக்தியை நாம் புரிந்து கொள்ள முடியும். அதுமாத்திரமல்ல, இவன் ஒரு கொலைகாரன், தனது 36வது வயதில், பதவிப்பித்துக்கு அடிமைப்பட்டு, தன் உடன் பிறந்த சகோதரனைக் கொன்று ஆட்சிக் கட்டில் ஏறியிருக்கிறான்.

ஆகவே, யேசபேலுக்கு, இளம் வயதில் பால் மாத்திரம் ஊட்டப்படாமல் விக்கிரக வெறியும், கொலை வெறியும் ஊட்டப்பட்டிருக்கிறதை நாம் அறிந்து கொள்ளலாம். இவளிடத்திலிருந்து, இவன் தப்பிக்க வழி எப்படி கிடைக்கும்?

ஆகாபின் மீது, யேசபேலுக்கு இருந்த செல்வாக்கைக் குறித்து, வேதம் எப்படிக் குறிப்பிடுகிறதென்று பாருங்கள். **"தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்ட படியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய என்னை விற்றுப் போட்ட ஆகாபைப் போல் ஒருவனுமில்லை.** (I ராஜா. 21:25) என்று. நெஞ்சுரமும், சமயோசிதமும் கொண்ட இந்த ராஜா, சாவி கொடுத்தால், இஷ்டம் போல் ஆட்டம் போடும் பொம்மையாக மாறிவிட்டான். என்ன பரிதாபம்!

இவன், மணமுடித்தவுடன், இவன் தன்னை விற்றுப் போட்டான் என்று வேதாகமம் சொல்லாதபடியால், திருமணத்தை, விற்றுப் போடுவதற்கான முதல் தவணை என்று சொல்லமுடியும்.

அன்பர்களே, ஒருவனோ அல்லது ஒருத்தியோ செய்யும் திருமணங்கள், அவர்கள் தங்களை விற்றுப் போடுவதற்கான முதல்படியாக இருக்க முடியுமென்பதால், நாம் திருமண உறவில், அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

## II. இரண்டாவது தவணை - சமரசம்

தன்னை விற்றுப் போடுவதற்கான இரண்டாவது தவணை, அவனுடைய சமரச புத்தி. அதாவது, தீமையை அனுசரித்துப் போகும் குணம். திருமணத்துக்கு முன்னான இவனுடைய வாழ்க்கையும் தேவனுக்குப் பிரியமானதாயிருந்திருக்க பெரிதாக நியாயமில்லைதான். ஆனால், பாகாலை வணங்கியது, இவன் திருமணமானவுடன் செய்த காரியமென்று வசனம் கூறுகிறது. **"நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது, அவனுக்குக் கொஞ்ச காரியமென்று நினைத்தாற் போல், அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தியாகிய யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து, அதைப் பணிந்து கொண்டு, தான் சமாரியாவில் கட்டின பாகாலின் கோயிலில் பாகாலுக்கு பலிபீடத்தை எடுப்பித்தான்"** (I ராஜா. 16 : 31, 32).

இங்கே, "பாகாலையும் சேவித்து" என்ற வார்த்தையை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். "பாகாலையும்" என்று சொல்லும் போது, ஏற்கனவே, சேவித்து வந்ததோடு, இன்னொன்றையும் சேர்த்துக் கொண்டுள்ளான். ஆம், யெகோவா வணக்கத்தோடு, பாகால் வணக்கத்தையும் சேர்த்து செய்துள்ளான். அதாவது தன்னுடைய பக்தியோடும், நம்பிக்கையோடும் சமரசம் செய்து கொண்டான். இந்த நிலையில், இவனால் நீடித்திருக்க முடியவில்லை. எலியா சொன்னது போல் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடக்க முடியாமல் யெகோவாவா அல்லது யேசபேலா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு யெகோவாவை இவன் கைவிட நேர்ந்தது. இதன் மூலம் மெய்த் தேவனோடு, இவனுக்கிருந்த கொஞ்ச நஞ்ச உறவும் அடியோடு அற்றுப் போயிற்று.

இப்படித்தான் முடியுமென்பது இந்த ஆகாபுக்கு ஏன் தெரியவில்லை? மலைப் பிரசங்கத்தில் இக்கருத்தை நமதாண்டவரும் வலியுறுத்தியுள்ளார். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனை பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது" (மத். 6 : 24). ஒருவனாலும் கூடாது என்று இயேசுக் கிறிஸ்து சொல்லியிருக்கும் போது, அது ஆகாபினால் மாத்திரம் கூடுமா? யாராலும் கூடாதுதானே.

இந்த ஆகாப், தேவனுக்கு ஒருபோதும் பயப்பட்டு நடந்ததேயில்லையென்று சொல்ல முடியாது. ஏனெனில், எலியாவைக் கொண்டு தேவன், இவன் சந்ததிக்கு வரும் அழிவைக் குறித்துச் சொன்னபோது, பயந்து நடுங்கி தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியுள்ளான். கவனியுங்கள். ஆகாப், **இந்த வார்த்தைகளைக் கேட்ட போது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின் மேல் இரட்டைப் போர்த்துக் கொண்டு, உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்து கொண்டான்**" (I ராஜா. 21 : 27).

தேவனுக்குப் பயப்படும் பயம் இருந்தும், தன்னுடைய சமரச புத்தியினால் தேவனை விட்டு விலகிப் போக நேர்ந்தது.

இன்றைக்கும், இதே நிலை தான். தேவனுக்குப் பயப்படுகிற பயம் மக்களிடம் உள்ளது. அத்தோடு தேவனுக்கு விரோதமான சிந்தையும் உள்ளது. ஆனால், இரண்டையும் சேர்த்துச் செய்வது, ஒருபோதும் தேவனுக்குப் பிரியமானதல்ல. ஏனெனில், கிட்டத்தட்ட எல்லாமே தோல்வியில் தான் முடிந்துள்ளது. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு சொல்லும் போது, "**நீ அனலாயாவது, குளிராயாவது இருந்தால் நலமாயிருக்குமென்று**" **சொல்லப்பட்டுள்ளது.** (வெளி. 3 : 15).

ஆகவே, நாம், நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் சமரசப் போக்கிற்கு ஒருபோதும் இடம் தரவேண்டாம். யெகோவா ஒரே கர்த்தராக இருக்கிறபடியால் எப்படி சமரசத்திற்கு வழியில்லையோ அதைப் போலவே, ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம் (சபை), ஒரே ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் என்பதிலும் சமரசத்திற்கு இடமேயில்லை. ஆகவே, குடும்பத்தோடும், சமுதாயத்தோடும், உலகத்தோடும் ஒத்துப் போக வேண்டுமென்று விரும்பி நம்முடைய ஆத்துமாவை இழந்து போக வேண்டாம்.

இந்த ஆகாப், தன்னுடைய நம்பிக்கையோடு **சமரசம்** செய்து கொண்ட நிலையிலும், இவன் "தன்னை விற்றுப் போட்டவன்" என்று வேதாகமம் சொல்லாததால், இன்னுமொரு தவணை இருக்கிறதென்று தெரிகிறது. அது என்னவென்று கீழே பார்ப்போம்.

## III. மூன்றாவது தவணை - ஆசைக்கு அடிமைப்படல்

தகுதியற்ற உறவை திருமணத்திற்காக தேடியபோதும், அந்த திருமணத்தின் மூலம் விக்கிரக வணக்கத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்த

போதும், இவன் தன்னை "விற்றுப் போட்டான்" என்று வேதாகமம் சொல்லாமல், **ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பிறகே இந்த அவப்பெயரால் இவனை அழைக்கிறது.** ஒருவன் திருந்துவதற்கு இனி வாய்ப்பும், வழியும் இல்லையென்ற நிலை வந்தபோதெல்லாம் வேதாகமம், இப்படி அழுத்தம் திருத்தமாகவே பேசியுள்ளது.

அப்போஸ்தலன் பவுல் தெசலோனியருக்கு எழுதும் போது இப்படி தீர்மானமான கருத்தோடு பேசியுள்ளார். "**ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்**". (II தெச. 2 : 11, 12) என்று.

எபிரேய ஆசிரியர் கூறும்போது, " .... மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" என்கிறார். (எபி. 6 : 6).

சரி, அப்படி என்ன நடந்தது என்று தெரிந்து கொள்வோம். ஆகாபின் அரண்மனை அண்டையில் குடியிருந்த, யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு, ஒரு திராட்சை தோட்டம் இருந்தது. அந்த திராட்சை தோட்டத்தின் மீது ஆசை வைத்து அவனிடம் அதைக் கேட்டான். எதற்குத் தெரியுமா? கீரைக் கொல்லையாக்குவற்கு! ஒரு இராஜ்ஜியத்திற்கு அதிபதியாக இருந்து, திரளான செல்வங்களை தனக்காக வைத்திருப்பவனுக்கு ஆசையைப் பார்த்தீர்களா? ராஜாவின் அரண் மனைக்குப் பக்கத்திலிருக்கிறபடியால், நமக்கு ஒரு பிரச்சினையுமிருக்காது, யாரும் நம்மிடத்தில் வம்புக்கு வரமாட்டார்கள் என்ற நினைப்பில் இருந்த நாபோத்துக்கு இது எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்?!

பாவம் அந்த ஏழை நாபோத் பயந்து போய், கர்த்தரை நோக்கிப் பார்க்கிறான். "**நாபோத் ஆகாபை நோக்கி : நான் என் பிதாக்களின் சுதந்திரத்தை உமக்குக் கொடாதபடி, கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான்**" (I ராஜா. 21 : 3). இந்த ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள தான் கர்த்தரை நம்பியிருக்கிறேன் என்றும் சொல்கிறான். அப்படியும் இந்த ஆகாப் மனமிரங்கவில்லை. சிறு பிள்ளையைப் போல், அடம்பிடித்து, தனது மனைவியின் சதித்திட்டத்தின் மூலம், நாபோத்தைக் கல்லெறிந்து கொன்று அதைப் பெற்றுக் கொள்ளப் போனபோது தான், தேவன் "**ஆகாப் தன்னை விற்றுப் போட்டான்**" என்று கூறுகிறார்.

பொருளாசையை, தேவன் எவ்வளவு கடுமையாகப் பார்க்கிறார் என்பதற்கு இதைவிடச் சரியான சான்று தேவையில்லை. பொருளாசை, ஒரு விக்கிரக ஆராதனை என்று வேதாகமம் கூறுகிறது. "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயங்களை அழித்துப் போடுங்கள்" (கொலோ. 3 : 5).

நிஜமான விக்கிரக ஆராதனையைக் காட்டிலும், பொருளாசை என்கிற விக்கிரக ஆராதனை மிகவும் ஆபத்தானது. என்ன இப்படிச் சொல்கிறீர்கள் என்கிறீர்களா? நான் என்ன செய்யட்டும், இது வேதத்தின் கருத்து. எப்படியெனில், நிஜமான விக்கிரக ஆராதனையாகிய பாகல் வணக்கத்துக்கு ஆகாப் சென்றபோது, அவன் தன்னை விற்றுப் போட்டான் என்று வேதாகமம் குறிப்பிடாமல், நாபோத்தின் இடத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாய் அவன் போனபோதே விற்றுப்போட்டான் என்று சொல்கிறது.

அதாவது, நிஜமான விக்கிரக வணக்கத்திலிருக்கும் ஒருவன் மீண்டு வர வழியிருக்கிறது. ஆனால், பொருளாசை என்ற விக்கிரக வணக் கத்திற்கு அடிமைப்பட்டவன் ஒரு போதும் மீளவே முடியாது என்பதே இதன் பொருள்.

என்ன பயமாக இருக்கிறதா? நான் பக்தியின் வேஷத்தையும் போட்டுக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் பொக்கிஷங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன் என்ன ஆகுமோ என்கிறீர்களா? நான் விக்கிரகங்களை வணங்குகிறவர்களை அருவருப்போடு பார்த்துக் கொண்டுள்ளேன், என் நிலைமை அதைவிட மோசமாகிவிடும் போல் உள்ளதே என்று எண்ணுகிறீர்களா?

அன்பர்களே, இன்று ஆன்மீகவாதிகளுக்கு பெரும் சவாலாக இருக்கும் பிரச்சினை பொருளாசை தான். கிட்டத்தட்ட அனைத்து பாவங்களையும் தூக்கி எறியும் ஒருவன் கூட, இதில் சிக்கிக் கொள்கிறான். பொருளாசையினால் தங்கள் ஆத்துமாக்களை அழித்துக் கொண்டவர்கள் அநேகர். ஆகாபோடு, இப்பட்டியல் முடிந்து விட்டது என்று எண்ணாதீர்கள், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் (மத். 27 : 3), பணக்கார வாலிபன் (மத். 10 : 17-22) அனனியா, சப்பீராள் (அப். 5), களஞ்சியங்களை இடித்துக் கட்டுவேன் என்று சொன்ன ஐசுவரியவான் (லூக். 12) என்று பட்டியல் நீள்கிறது.

இன்று அநேகர், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தயங்குவதற்கு பொருளாசையும் ஒரு காரணம். ஏற்றுக் கொண்டவர்கள் இழந்து போவதற்கும் இது ஒரு காரணம். ஆகவே இவ்விஷயத்தில் நம்முடைய நிலையை நாம் தற்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம். நாம் ஏற்கனவே பார்த்தது போல் தேவன் இப்பாவத்தை மிகக் கடுமையாகப் பார்க்கிறார். நாம் திரும்பி வர முடியாத எல்லைக்கு, இப்பாவம் நம்மை இழுத்துச் சென்றுவிடும். நம்முடைய ஆத்துமாவை இழந்து போகச் செய்துவிடும். ஆகவே, ஜாக்கிரதையாயிருப்போம்.

அருமையான தேவப் பிள்ளைகளே, ஆகாபைப் போலவே, நாமும், நம்முடைய சூழ்நிலைகளின் அடிப்படையில் நம்மைக் கொஞ்ச கொஞ்சமாக விற்றுப் போடுவதற்கு வாய்ப்புண்டு. இந்தக் காரியம் நம்மையுமறியாமல் நடந்து விடும். ஆகவே, ஞானி சாலமோன் பிரசங்கியில் கூறியுள்ளது போல், "**தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோமாக**" (பிர. 12 : 13). ஆமென்.

**செ. ராஜநாயகம்.**

# சுவிசேஷ அழைப்பு

இன்றைய மத உலகத்தில் ஒரு மனிதனை தேவன் (இரட்சிப்புக்கு) அழைப்பதைக் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவைகளில் சில பிரதானமானவைகளை நாம் பார்க்கலாம். முதலாவதாக, தேவன் தங்களிடத்தில் நேரடியாக மெல்லிய சத்தத்தின் மூலமாக பேசுகிறார் என்று சிலர் போதிக்கின்றனர். இரண்டாவதாக, கிறிஸ்து தங்களிடத்தில் கனவிலோ அல்லது காட்சியிலோ, தரிசனம் தருகிறார் என்று மற்றவர்கள் சொல்கின்றனர். மூன்றாவதாக, தேவன் தங்களை சில விசேஷித்த அனுபவத்தின் மூலமாக அழைக்கிறார் என்று சிலர் நம்புகின்றனர். இந்த மூன்றிலுமே, அவர்களை இரட்சிப்பதிலும் அவர்களுக்கு சில விசேஷித்த செய்தியை அளிப்பதிலும் இதுவே தேவனுடைய வழி என்று சொல்லுவர். ஆனால் வேதாகமம் இதனை போதிக்கிறதா? இங்கே ஒரு எச்சரிக்கை உள்ளது. எப்பொழுதும் காரியங்களைக் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருப்பவர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

முதலாவது, நாம் கண்டுகொள்ள வேண்டிய காரியம் இதுதான். இன்றைக்கு தேவன் பேசுகிறாரா? அப்படியானால், அவர் எவ்வாறு பேசுகிறார்? நாம் எபி. 1: 1,2 பார்க்கும் போது, அது நமக்கு எளிதாகிறது.

எனவே இதன்படி, தேவன் இன்றைக்கு பேசுகிறார், அவர் தமது குமாரன் மூலமாக பேசுகிறார். இது மத் 17 : 5ல் கிறிஸ்து மறுரூபமாகும் பொழுது இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் சொல்வதைக் கேளுங்கள்; **"இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்"**.

அடுத்த கேள்வியானது : இன்றைக்கு தேவனோ அல்லது கிறிஸ்துவோ மனிதனுடன் நேரடியாக பேசுவதுண்டோ? பின்வரும் வசனப்பகுதிகளை வாசிக்கும் பொழுது நமக்கு தெளிவுண்டாகிறது. **"இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது"**. (யோ.20:30, 31)

இப்பொழுது ஏன் இவைகள் எழுதப்பட்டுள்ளன? நாம் நம்பும்படியாகத்தான். ஆனால் இவைகள் எங்கே எழுதப்பட்டுள்ளன? புதிய ஏற்பாட்டில். எனவே நாம் அதிலுள்ளவைகளை வாசித்து கற்றுக் கொண்டோமானால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்.

மீண்டுமாக, நாம் வாசிக்கிறதாவது : **"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."** (ரோமர் 10 : 17) கேள்வி : விசுவாசம் வேறு எப்படியேனும் வருமா? அப்படியானால், வேதாகமம் இவ்வாறு எடுத்துரைக்காது. சிலர் இதைக்

கேட்டோம் என்றும், அதை பார்த்தோம் என்றும், அனுபவத்தைப் பெற்றோம் என்றும் கூறுகின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தை அப்படிப் பட்டதை நமக்கு போதிப்பதில்லை. ஆனால், விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதன் மூலம் வருமென்று நமக்கு போதிக்கிறது. எனவே, ஒரே வேதாகமமும், ஒரே விசுவாசமும் உண்டு (எபே. 4 : 5).

விசுவாசம் தேவனுடைய வசனத்தை கேட்பதன் மூலம் வருகிறது என்ற காரணத்தினாலேயே வசனத்தை கற்பதிலும் (II தீமோ. 2 : 15), வேதத்தை ஆராய்வதிலும் (யோ.5:39) உள்ள முக்கியத்துவத்தைக் குறித்து நாம் கற்பிக்கப்படுகிறோம். உண்மையில், இதனால்தான் வேதாகமத்தில் அதன் ஏவுதலைக் குறித்தும், பூரணத்துவத்தைக் குறித்தும் அதிகமாக வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது (II தீமோ. 3 : 16, 17)

சுவிசேஷம் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டுள்ளது என வேதம் நமக்கு கூறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கேளுங்கள் "**நாங்கள் எங்களை பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.**" (II கொரி 4 : 5-7) அவர் இங்கே என்ன சொல்கிறார்? சுவிசேஷத்தை பிறருக்கு எடுத்துச் சொல்ல தேவன் பவுலைப் போன்ற தனி மனிதர்களையே தெரிந்தெடுக்கிறார் எனக் கூறுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகளில் காணப்படும் பல்வேறு மனமாற்றங்களைக் குறித்து இப்பொழுது சிந்தியுங்கள். இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஒரு தனி மனிதனுக்கு தேவன் சொல்லியிருக்கிறார் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கொடுங்கள் பார்க்கலாம். கண்டிப்பாக உங்களால் முடியாது. எடுத்துக்காட்டாக, அப். 8ம் அதிகாரத்தில், தேவதூதன் எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்கும்படியாக பிலிப்புவை அனுப்பினார். கேள்வி : ஏன் அந்த தேவதூதன் பிலிப்புவை சமாரியாவிலே மக்களுக்கு தொடர்ந்து பிரசங்கிக்கும்படி விட்டுவிட்டு தானே செல்லவில்லை? ஏனென்றால், தேவன் சுவிசேஷத்தை மண்பாண்டங்களில் வைத்துள்ளார். எனவே அந்த சுவிசேஷத்தின் செய்தியை எடுத்துரைப்பது மனிதனுக்குரியதாகும். மேலும் அப். 9ம் அதிகாரத்தில் சவுல் தேவனிடத்தில் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும் பொழுது, கர்த்தர் அவன் பட்டணத்திற்குள் செல்லும்படியாகவும் அவன் செய்ய வேண்டியது அங்கே சொல்லப்படும் எனவும் கூறினார். பின்பு அனனியா வந்து இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிக் கூறினான் (அப். 22 : 16). கேள்வி : ஏன் கர்த்தர் அவனிடமே

கூறவில்லை? ஏனென்றால் அப்படி **செய்வது தேவசித்தமல்ல.** அப்போஸ்தலருடைய நடபடிகளில் காணப்படும் மற்ற **மனமாற்றங்களும்** இவ்வாறு தான் அமைந்துள்ளன. வேதாகமத்தைத் **தவிர கர்த்தர்** மக்களிடம் இன்றைக்கு நேரடியாக பேசுவதில்லை **என்பதற்கும்,** இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் **என்று** கூறுவதற்கும் கர்த்தர் பிரத்யேகமாக தோன்றுவதில்லை என்பதற்கும் இதுவே காரணம்.

கர்த்தர் இங்கே இருந்தாலும் அவர், ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுவதில்லை (அப். 9), அப்படி செய்வாரானால் அது ஏற்கெனவே பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷமாயிராமல் வேறொன்றாக இருக்காது. (கலா. 1 : 6–9), எனவே, ஏற்கெனவே மனிதன் செய்ய வேண்டியது என கட்டளையிட்டவைகளை செய்வதற்காக அவரே வருவாரானால் அதில் எந்த நோக்கமுமிருக்காது. (மாற்கு.16:15, 16). மனிதனால் செய்ய முடிந்தவைகளை, கர்த்தர் மனிதனுக்காக செய்ய மாட்டார் எனவும் கூறலாம்.

சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் பிரசங்கியாரின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் காரணம் என்னவெனில் சுவிசேஷம் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து கூறினதாவது, "**பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.**" (மாற்கு 16 : 15; 16) மேலும் நாம் வாசிக்கிறதாவது, "**ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.**" (ரோ.10 : 13–15) பின்பு இறுதியாக, "**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு.**" (II தீமோ.4:2). இந்த முறையை கர்த்தர் தமது சித்தத்தை வெளிப் படுத்துவதற்கென தெரிந்து கொண்டுள்ளார் என்பதை நீங்கள் காணலாம். இது மிகவும் எளிமையானதாகும்.

அது உண்மையாயிருக்கிற நிலையில், பவுல் தன்னுடைய தெசலோனிய சகோதரருக்கு எழுதுகிறதாவது : "**நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.**" (II தெச.2 : 14). தெசலோனியர்களை கர்த்தர் சுவிசேஷத்தின் மூலமாக அழைத்தார் என்று பவுல் கூறுகிறார். அதாவது, பவுல்

அவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார், அவர்கள் அதைக் கேட்டு, கீழ்ப்படிந்தனர், இவ்வாறாக அவர்கள் கிறிஸ்துவிடம் அழைக்கப்பட்டனர். இன்னொரு விதமாக கூறவேண்டுமானால் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதன் மூலம் கிறிஸ்து அவர்களை இரட்சிப்புக்கு அழைத்தார் எனவும் கூறலாம்.

இன்றைக்கு எப்படி? நாம் எப்படி அழைக்கப்பட்டோம்? கிறிஸ்தவர்களாகிய நாமும் அதே சுவிசேஷத்தின் மூலமாக அதே விதமாகத்தான் அழைக்கப்பட்டுள்ளோம். அதாவது, சுவிசேஷம் நமக்கு பிரசங்கிக்கப்பட்டது, நாம் அதை கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிந்தோம். கர்த்தர் நம்மை இரட்சித்தார். நாம் பிறருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பொழுது, மீண்டும் மீண்டுமாக அது நிகழ்கிறது. கர்த்தர் ஒரு நபரை ஒரு விதமாகவும் மற்றொரு நபரை வேறு விதமாகவும் அழைப்பதில்லை. ஆனால், அவர் அனைவரையும் ஒரே சுவிசேஷத்தின் மூலமாகவும் அழைக்கிறார்.

ஆம், தேவன் இன்று பேசுகிறார், கிறிஸ்துவின் மூலமாக பேசுகிறார். கிறிஸ்து பேசுகிறார் ஆனால் அவர் வசனத்தின் மூலமாக பேசுகிறார். கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் சுவிசேஷத்தை பிறருக்கு பிரசங்கிப்பதும் போதிப்பதும் கடமையாயிருக்கிறது. இவ்விதமாக, கர்த்தர் சுவிசேஷ பிரசங்கியார் அல்லது போதகர் மூலமாக தமது சித்தத்தை வெளிப்படுத்தவும், இழந்து போனவர்களை தம்மிடத்தில் அழைத்துக் கொள்ளவும், கிரியை செய்கிறார். (மத் 11 : 28-30).

சுவிசேஷத்தை பிரசங்கிப்பது நமது முதல் கடமையாயிருக்கிறது. கர்த்தருக்கு கீழ்ப்படிய மனதுள்ளவர்களை வழிநடத்துவது நமது இரண்டாவது கடமையாயிருக்கிறது. (மத்.28:19,20). எனவே பவுல் இவ்வாறு கூறினார் : "**ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார். சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிற வர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.**" (I கொரி. 1 : 17, 18).

ஆதலால் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி மாத்திரம் தான் அனுப்பப்படவில்லை என்கிறார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதே அவருடைய முதல் கடமையாயிருந்தது அதற்கு பின்பாக கர்த்தருக்கு கீழ்ப்படிய மனமுள்ளவர்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்.

நீங்கள் இதற்கு முன் சுவிசேஷத்தைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையானால், இப்பொழுது நீங்கள் சுவிசேஷ அழைப்பைப் பெறுகிறீர்கள் - அது கிறிஸ்துவைக்கிட்டி சேரும்படியான அழைப்பு. அவருக்கு கீழ்ப்படியுங்கள், அவர் உங்களை இரட்சிப்பார்.

**J.C. Choate** **J.C. சோட்**

# தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது எது?

கிறிஸ்துவுக்காய் வாழ்வதென்பது சுலபமான காரியம் அல்ல. தேவன் போதித்த அவருடைய வார்த்தையின் படி வாழும் போது, நம்மை சுற்றிலும் உள்ளவர்களின் வாழ்க்கையை விட நம்முடைய வாழ்க்கை மிகவும் வித்தியாசமாகக் காணப்படும். ஆனால் நம்முடைய பிதாவாகிய தேவன் தம்முடைய கிருபையினின்று நம்மை விலக்கி விடுவதில்லை. இந்த உலகத்தின் சோதனையிலும், வேதனை நேரங்களிலும் சாத்தானை மேற்கொள்ள அவர் பல ஆயுதங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய வல்லமையுள்ள வார்த்தைகளே அந்த ஆயுதம்.

தேவன், இயேசுவைப் போல் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கிறிஸ்து தனக்கு சோதனை வந்தபோது அதை எவ்வாறு மேற்கொண்டார்? 40 நாள் உபவாசத்திற்கு பிறகு உடல் சோர்ந்த நிலையில் பிசாசு அவரை சோதித்தான். ஒவ்வொரு முறையும் தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு அவனை ஜெயித்தார். நாமும் கூட ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் பிரச்சினைகளில் சோர்ந்து போகாமல் அவருடைய வல்லமையுள்ள வார்த்தைகளை ஆயுதங்களாகக் கொண்டு அவைகளை ஜெயிக்க வேண்டும்.

சரி, நம் தலைப்பிற்கான பகுதிக்கு இப்போது வருவோம். I பேதுரு 3ம் அதிகாரம் 1-6 வசனங்கள், அவிசுவாசியான கணவனைக் கொண்டுள்ள பெண்ணுக்கு ஆலோசனையாகக் கொடுக்கப் பட்டாலும், இது அனைத்துப் பெண்களுக்கும் பொருந்தினதாக அமைகிறது.

4ம் வசனத்தில் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாக கூறப்படுபவை **சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியும்.**

இன்று அநேகர் நினைத்துக் கொள்கிறார்கள். சாந்தமாய் இருப்பதென்பது ஏமாந்த தன்மை என்று. அவர்களுக்கு பலமான குணங்கள் இராது என்றும் கோழை மனதுடையவர்கள் என்றும் விளக்கம் தருவார்கள். அவர்கள் தைரியமும், சுய நம்பிக்கையும் இல்லாதவர்கள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

ஆனாலும் நம்முடைய தகப்பன் சொல்கிறார். சாந்தமுள்ள பெண் அவருடைய பார்வையில் விலையேறப்பட்டவள் என்று.

விலையேறப்பட்டவள் மட்டுமல்ல, மிகவும் விலையேறப்பட்டவள்.

மத்தேயு : 11 ; 29-ல் இயேசு கிறிஸ்து கூறும் போது "**நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்**" என்கிறார். நம்முடைய ரட்சகராகிய இயேசுகிறிஸ்து பலவீனரல்ல. தைரியமும், தன்னம்பிக்கையு மில்லாமலில்லை. அதை நாம் எப்படி அறிவோம்? 40 நாட்கள் உபவாசித்து இளைத்துப் போன நிலையில் அவர் சாத்தானை மூன்று முறை முறியடித்தார் அல்லவா? எப்படி? எந்த ஆயுதத்தை அவர் பயன்படுத்தினார்? தேவனுடைய வார்த்தையையே பயன்படுத்தினார். மூன்று முறை அவர் "**எழுதியிருக்கிறதே**" என்று கூறினார். எனவே நம் இரட்சகர் சாந்தமானவர். ஆனால் பலவீனரல்ல.

சாந்த குணத்தை தேவன் எப்படி விவரிக்கிறார்? சாந்தமுள்ளவள் என்பவள் தாழ்மையானவள். மற்றவர்களுக்காக தன் விருப்பத்தை விட்டுக் கொடுப்பவள். சாந்த குணமுள்ளவளின் இருதயம் பொருளாசையினாலும், பெருமையினாலும், பொறாமையினாலும் நிறைந்திருக்காது. தங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடாமல் தங்கள் செயல்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். அவர்கள் அமைதியாகவும், அன்பாகவும் இருப்பார்கள்.

அமைதலுள்ள ஆவி பற்றியும் தேவன் 4ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். அமைதலுள்ள ஆவியையுடைய ஒரு நபர் அமைதியாயும், மென்மைத் தன்மையுடையவராகவும் இருப்பார்கள். அவர்களுடைய மனது போதுமென்று சொல்லக் கூடியதாகவும், வாழ்க்கையில் எதையுமே சுலபமாக எடுத்துக் கொள்ளக் கூடியதுமாய் இருக்கும். அவர்கள் எண்ணங்கள் எல்லாம் சமாதானத்துடன் இருக்கும். அவர்கள் தங்களை சுயகட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். அவர்கள் தங்கள் முழு நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தேவன் மேல் வைத்திருப்பதால் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படமாட்டார்கள். எடுத்துக்காட்டாக இயேசுவின் தாயாகிய மரியாளை எடுத்துக் கொள்ளுங்கள். காபிரியேல் தூதன் மூலம் தனக்கு தேவனுடைய குமாரன் பிறப்பார் என்று கேள்விப்படுகிறாள். அங்கு அவளுடைய பதிலைப் பார்த்தால், "**இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின் படியே ஆகக் கடவது**" என்கிறார்கள். (லூக்கா. 1 : 38).

தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவர்களாக கருதப்படும் பெண்கள், பரத்திலிருந்து வருகிற ஞானத்தைப் பெற்றிருக்கிறார்கள் (யாக். 3 : 17).

அவருடைய எண்ணங்கள் பரிசுத்தமாயிருக்கும். அவளுடைய இருதயம் சமாதானமுள்ளதாக இருக்கும். அமைதலுள்ள ஆவியை

பெற்றிருப்பாள். இரக்கமும், நற்கனிகளைக் கொடுக்கக் கூடியவளாகவும் இருப்பாள். அவளிடத்தில் பாரபட்சம் இராது. அவளிடத்தில் மாய்மாலமும் இராது.

தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவளாக காணப்படும் ஸ்தீரி தன் திருமண காரியத்திலும் தேவனுடைய ஞானத்தைக் கையாளுபவளாயிருப்பாள்.

இப்போர்ப்பட்ட மனநிலையை நாம் எப்படிப் பெற்றுக் கொள்வது? நம்முடைய ரட்சகராகிய இயேசுவே அதற்கு பதிலாக இருக்கிறார். I பேதுரு 2 : 23ம் வசனத்தில் இயேசுவுக்கு இந்த பலம் எங்கிருந்து வந்ததென்றால் இவர் தன்னை தேவனுக்கு அர்ப்பணித்ததன் மூலமாக கிடைத்தது.

மீண்டுமாக ஒரு பெரிய கேள்வி. தேவன் ஏன் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியை விலையேறப்பட்டதாக விரும்புகிறார்? பதில் I பேதுரு 3 : 1 – 5. இங்கே தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடாத கணவனை பெற்றுள்ள மனைவிக்கு ஆலோசனை கொடுக்கப் பட்டுள்ளது.


நாம் சில நேரங்களில் நினைத்து விடுகிறோம். நாம் பேசுகிற பேச்சின் மூலம் மக்கள் மனதை மாற்றி விடலாம் என்று. ஆனால் என்ன பேசுகிறோமோ அதைவிட நாம் என்ன செய்கிறோமோ அதில் தான். மக்கள் அசைக்கப்படுவார்கள். நாம் சில சமயங்களில் நம் கணவன் முன்பு பார்வைக்கு நல்லவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். வெளிப்புறத் தோற்றம் ஒரு பெண்ணுக்கு அழகல்ல. உள்ளத்தில் இருக்கும் சாந்தமும் அமைதலுள்ள ஆவியே அழகாக அமைய வேண்டும்.

நாம் இந்த குணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். ஏனென்றால் அவர் **சாந்தமாயும், அமைதியாயும்** இருந்தார். தன்னை வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்தார். பாவத்தினால் தேவனிடத்திலிருந்து பிரிந்த நாம் மீண்டும் தேவனோடு ஒப்புரவாக இயேசுகிறிஸ்து மரித்தார். அவருடைய இரத்தம் நமக்கு ஞானஸ்நானத்தின் மூலமாக பாவ மன்னிப்பை கொடுக்கிறது.


ஆகவே, நாமும் நம்மை வெறுமையாக்கி, அவருக்கு அடிமைகளாக மாறுவோம். நீங்களும், நானும் இந்த சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியை உடையவர்களாயிருப்போம். அப்போது தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவர்களாக காணப்படுவோம்.

**MARY DI PALMA** **ரேச்சல் நாயகம்.**

# SIXTH SUMMER BIBLE
# ஆறாவது வேனிற்கால வேதாகம முகாம்




பக்தியூட்டும் பாடல்களில் வழிநடத்தும் சகோதரர்கள்
Brethren who lead devotional songs




காலை தியான வகுப்பில் செய்தியளிக்கும் சகோதரர்
Message by a brother in morning devotion.


# CAMP MAY, 5 to 7-2003
# - மே, 5 to 7-2003, ஏலகிரி மலை




மலைப் பிரசங்க சூழலை நினைவுபடுத்தும் காலை தியான நேரத்தில் ஒரு பகுதியினர்
Section of the crowd in the morning devotion, The setting reminds the sermon on the mount of Jesus.




முகாமின் பகல் நேர வகுப்பின் போது.....
Day class in the Camp




முகாமில் வாலிபர்களுக்கான சிறப்பு வகுப்பு
Special Session for the youth



முகாமில் சகோதரிகளுக்கான சிறப்பு வகுப்பு
Ladies Class in the Camp



முகாமில் உணவு வேளையின் போது...
During the time of food Serving



முகாமில் மாலை நேர வகுப்பின் ஒரு பகுதியினர்
Evening Class in the Camp

# வேனிற்கால வேதாகம முகாம் பற்றி...

**கா**ங்கயம் கிறிஸ்துவின் சபையார் நடத்திய வேனிற்கால வேதாகம முகாமில் பங்கு பெற்ற அனுபவம் பற்றிய என்னுடைய தொகுப்பு.

**மே மாதம் 4ம் தேதி** கொங்கணாபுரம் சபையாரோடு முகாமில் கலந்து கொள்ள புறப்பட்டு சென்றோம். சரியாய் மாலை 5 மணிக்கு ரயில் வந்தது. அதில் சபையார் யாவரும் ஏறினோம்.

**அன்பும் ஐக்கியமும் :** கிறிஸ்தவ அன்பையும் ஐக்கியத்தையும் முகாமில் முழுமையாகப் பார்த்தேன். கனம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள் என்ற வேத வார்த்தையின் படி, ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் என்று சொல்லிக் கொண்டதும், இரயிலில் அமர்ந்து வந்தவர்கள் எழுந்து புதியவர்களுக்கு இடம் கொடுத்து நலம் விசாரித்தது உண்மையான கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்துவதாக இருந்தது. முகாமில் பங்கு பெறுபவர்களுக் காகவே சிறப்பு ரயில் விட்டது போன்று எந்த பெட்டியில் ஏறிப் பார்த்தாலும் நமது சகோதரர்கள் தான். தெரிந்தவர்கள் ஆனாலும் தெரியாதவர்கள் ஆனாலும் வாழ்த்துதலும் அன்போடு விசாரிப்பதும் மிக்க மகிழ்ச்சியைத் தந்தது.

இனிதாக பயணம் செய்து இரவு சாப்பாட்டை ரயிலிலேயே முடித்தோம். அப்போதும் உணவு கொண்டு வராதவர்களுக்கு கொண்டு வந்தவர்கள் உணவு கொடுத்து உதவுவதும், ஒரே பொட்டலத்தில் இரண்டு பேர் மூன்று பேர் கைவைத்து சாப்பிட்டதும் கிறிஸ்தவர்களின் கள்ளங்கபடமற்ற உள்ளத்தைக் காட்டியது. ஜோலார்பேட்டை சந்திப்பில் இரவு 10.00 மணிக்குப் போய் சேர்ந்தோம். வெளியில் தயாராக 2 பஸ் நின்று கொண்டு இருந்தது. அங்கேயும் அப்படித்தான். ஒருவருக்கொருவர் மூட்டை, முடிச்சுகளைத் தூக்கிக் கொள்வதும், உதவுவதும் அருமையான காட்சியாக அமைந்தது. அத்தோடு, வாகனங்களில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் முதலிடம் முன்வந்து ஒதுக்கினர்.

இரவு சுமார் 11 மணியளவில், முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, ஏலகிரி மலை YMCA வளாகத்திற்கு கர்த்தரின் வழி நடத்துதலின் படி சுகமாய் போய் சேர்ந்தோம். அங்கு அறைகள் சுத்தமாக்கப்பட்டு எங்களுக்காக ஆயத்தமாய் இருந்தது. "ஒருவனும் தனக்கானவைகளை தன்னுடையவைகள் என்று சொல்லவில்லை" என்று அப்போஸ்தலர் 4ம் அதிகாரத்தில் ஆதி திருச்சபையார் நடந்து கொண்டது போல், நீங்கள் இங்கே தங்கிக் கொள்ளுங்கள், நீங்கள் இங்கு தங்கி கொள்ளுங்கள் என்று இடம் கொடுப்பதும், போர்த்துக் கொள்ள பெட்சீட் இல்லை என்றால், பரவாயில்லை என்னிடம் இருக்கிறது என்று சொல்லி முகமறியாத சகோதரர்கள் பகிர்ந்துக் கொண்டது எனக்கு ஆச்சரியமாய்

இருந்தது. உணவு அருந்தும் போதும் கூட இப்படித்தான். வயதானவர்களுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுப்பதும் வரிசையில் நிற்கும் போது யாராவது இடையில் நுழைந்தால் கூட அது பற்றி யாரும் கண்டுக்காமல் இருப்பதும் நம்புவதற்க்கே சிரமமாக இருந்தது.

பல ஊர்களில் இருந்து வந்துள்ள அனைவரும் சபையை பற்றியும் ஊழியங்கள் பற்றியும் பரஸ்புரம் விசாரித்துக் கொண்டனர். இளம் ஊழியர்கள் முதிர்ந்த ஊழியர்களின் அநுபவங்களைக் கேட்டு கற்றுக் கொண்டனர். பிற சபை விசுவாசிகளிடம் குறை கேட்டு அவர்களுக்காக ஜெபித்தனர். இறுதி நாளில், பிரியும் போது பிரியா விடைக் கொடுத்து, மீண்டும் அடுத்த வருடம் கர்த்தருக்குச் சித்தமானால் சந்திப்போம் என்று கர்த்தரின் சித்தத்துக்கு ஒப்பு கொடுத்து சொன்னது, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தை நினைப்பூட்டுவதாக இருந்தது.

இவற்றிற்கெல்லாம் மேலாக நாங்கள் தங்கி இருந்த இடங்களில் எல்லாம் மாமரங்கள், பலா மரங்கள், ரோஜா தோட்டம் என எத்தனையோ மரங்கள் இருந்தன. இதில் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தது மாமரம் தான். மரத்தில் மாங்காய் ஏராளமாய் காய்த்து குலுங்கின. தலையில் தட்டுமளவுக்கு கீழே தொங்கின. ஆனால் அங்கே இருந்த சுமார் 400 பேர்களில் யாரையாவது மாங்காய்களையோ, கனிகளையோ தொடச் சொல்லுங்கள் பார்க்கலாம். ஒருவர் கூட தொட்டுப் பறிக்கவில்லை. ஒரு தாயிடம் ஒரு குழந்தை கீழே விழுந்ததை எடுத்து கொடுக்கிறது. அம்மா, இதை சாப்பிடட்டுமா என்று கேட்கிறது. குழந்தை எடுத்து அது பாட்டுக்கு சாப்பிடாமல் வந்து கேட்குதே பாருங்கள். அந்த குழந்தை கூட ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டது. அந்த தாய் வேண்டாம்மா இது நல்ல பழம் அல்ல. இதை சாப்பிட்டால் இயேசுவுக்கு பிடிக்காது, நான் நல்ல பழம் வாங்கித் தருகிறேன் கீழே கிடைக்கிறதை எடுத்து சாப்பிடக் கூடாது, தூரமா வீசி எறி என்று சொல்கிறாள். குழந்தை சரிம்மா என்று வீசிவிட்டு பேசாமல் இருக்கிறது. இப்படி எந்த கூட்ட மக்களும் நடப்பார்களா? இவர்கள் தான் உண்மையான கிறிஸ்தவர்கள் என்று என் தேவனை ஸ்தோத்தரித்தேன்.

## சத்தியமும், ஆத்தம திருப்தியும் :

முகாமின் திட்டங்களும், செயல்பாடுகளும் மெச்சும்படி இருந்தது. ஊழியர்கள் மிகவும் அருமையான முறையில் சத்தியத்தில் உள்ளபடியே மக்களுக்கு புரியும்படியாகவும், ஆத்துமாவை தொடும்படியாகவும் பேசினர். பேச்சாளர்கள் யாரையும் குறைத்து மதிப்பிடமுடியவில்லை. குறிப்பாக, காங்கயம் சபை ஊழியர் சகோ. ராஜநாயகம் அவர்கள் பேசிய செய்தியில் அப்போஸ்தலர் 3,4 அதிகாரங்களிலிருந்து எடுத்துப் பேசின, “அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள்” (4:13) என்ற செய்தி இப்பொழுதும் என்

மனதில் நிழலாடுகிறது. அப்போஸ்தலர்கள் பற்றி, அப்படி சொல்லும்படி அவர்கள் என்ன செய்தார்கள். அவர்களிடம் இருந்த இயேசுவின் குணங்கள் தான் என்ன என்று விளக்கினதும், அப்படிப்பட்ட குணங்கள் இருந்தால் நம்மை பார்த்தும் இவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்தவர்கள் என்று இந்த சமுதாயம் சொல்லும், அப்படி சொல்லும் படி நடக்கணும் என்று சொல்லும் போது அந்த வார்த்தைகள் ஒவ்வொருவருடைய மனதையும் தொட்டது. நாமும் அப்படி பேர் வாங்கும்படி நடக்கணும் என்ற உற்சாகத்தைத் தந்தது. அதைப்போலவே சகோ. சார்லி டீ பால்மா அவர்களும் தனக்கு ஒதுக்கப்பட்ட தலைப்பின் கீழாக மிக நேர்த்தியாக பேசி, கலந்து கொண்ட ஒவ்வொருவரும் ஆன்மீக வாழ்வில் ஊக்கம் பெற உதவி செய்தார்.

பெண்கள், வாலிப பெண்கள், வாலிபர் மற்றும் குழந்தைகள் என்று ஒவ்வொரு பிரிவாருக்கும் தனித்தனி வகுப்புகளை ஏற்படுத்தியிருந்தது மிகுந்த உற்ச்சாகத்தைத் தந்தது. எனது மனைவியிடம் கேட்ட போது நான் இயேசுவுக்காக எதையாகிலும் செய்தே ஆக வேண்டும், தேவன் என்னிடம் எவ்வளவு பெரிய பொறுப்புகளை தந்திருக்கிறார், அவர் என்னிடம் எப்படியெல்லாம் எதிர்பார்க்கிறார் என்பதையும் நான் நன்றாகவே கற்றுக் கொண்டேன், இதுவரை நீங்கள் பார்த்த மனைவி வேறு இனி பார்க்கக் போகும் மனைவி வேறு என்று சொன்னார்கள். கீழ்ப்படிதல், அன்பு கூறல், உயர்வானதைச் செய்தல் என்று இனிமேல் நடந்து தேவனை மகிமை படுத்துவேன் என்று தீர்மானமாய் சொன்னர்கள்.

வாலிபர் வகுப்பு பற்றி என்னுடன் வந்த வாலிபரிடம் கேட்ட போது, நான் எதை சொல்லட்டும் என்று சொன்னதோடு, பேசின 3 பேரும் எங்களை ஆண்டவருக்கென்று ஒப்புக் கொடுக்க செய்து விட்டனர். எங்களது செயல்களை இனி பாருங்கள் என்றனர். வெகுவாய் மாற்றத்தைக் காண முடிந்தது. வாலிப பெண்கள் வகுப்பும் அப்படியே கவர்ந்தது என்று எனது தங்கை தெரிவித்தார்கள். எப்படி வாழ்தல் தேவனுக்கு பிரியமானது என்ன என்றும், பிசாசை எதிர்கொள்வது எப்படி என்றும், நன்றாய் கற்றுக் கொண்டதாக சொன்னாள். மொத்தத்தில் மூன்று நாள் மட்டுமல்ல இன்னும் 30 நாட்கள் அங்கேயே இருந்து வேதத்தை படித்துக் கொண்டு இருக்கலாமா என்ற ஆசை ஏற்படுகிறது. மூன்று நாட்கள் படித்தது போல் இல்லை, 30 நாட்கள் படித்தது போன்ற அனுபவம் ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் முகாமில் இருந்து வந்தவர்கள் கர்த்தரை விட்டு அவ்வளவு எளிதில் விலக மாட்டார்கள் என்று நம்பலாம்.

இறுதியாக சிறுபிள்ளைகள் வகுப்பைப் பற்றி கேட்கவே வேண்டாம். சகோதரர்கள் நத்தானியேல், பிலிப் பாஸ்கர் ஆகிய இருவரும் அப்படியே அசத்தி விட்டார்கள். பிள்ளைகள் இன்றும் அதே நினைவோடு ஆடிப் பாடிக் கொண்டிருக்கின்றனர், இது போதாதா? தேவனுக்கே மகிமை உண்டாவதாக !

**ஆபிரகாம் லிங்கன்**

# திரும்பக் கிடைக்குமோ?

**வி**சித்திர விநோதமாய் விஞ்ஞானிகள் வியக்கும்படி வையகத்து மண்ணால் விந்தை மனிதனை வனைந்தெடுக்கும்முன், தம் அநந்த ஞானத்தால், நமதறிவுக்கு அதிதூரமான நினைவுகளுடன் பரம குயவனாம் பரலோகத்தின் தேவன், அவனுக்குத் தேவையான சிறுதுரும்பையும் உருக்கொடுத்துப் புடைத்தெடுக்கையில், மாந்தர்கள், மணித் துளிகளின் மேன்மையை உணர வேண்டும் என்ற உன்னத தொலைநோக்குடன், வானை நடைபாதை எனப் பாவித்து, மணவறைக்கு கெம்பீரமாய் கிளம்பும் மணவளானான கதிரவனையும், விண்ணை நதியெனக் கருதி மிதந்து வரும் மதியையும், விளை நிலமென எண்ணி விண்மீன்களை விதையாகத் தூவியும் படைத்தார்.

கடிகாரத்தின் நொடிமுள்ளும், பொங்குமாங் கடலின் பேரலையும் எந்நபருக்கும் காத்திருப்பதில்லை. காலம், தன்னை கவனிப்போர் இல்லை என்றாலும், பயன்படுத்துவோர் குறைவென்றாலும் பாரபட்சமில்லாமல் தன் அலுவலை நிறுத்தாது செய்யும் தன்மையுடையதாக விளங்குவதோடு நில்லாமல், தன்னை இழந்தோர்க்கு மறுவாய்ப்பை ஈவு இரக்கமின்றி மறுப்பதை தன் குணமாகவும் கொண்டதாக அமைகிறது. வாலிபப் பருவத்தில் இருக்கும் நீங்கள் பள்ளி அல்லது கல்லூரித் தேர்வுகளை முடித்து விடுமுறை நாட்களை நகர்த்திக் கொண்டிருப்பீர்களென நம்புகிறேன். சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற கர்த்தருடைய வேதம், "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்". (எபே. 5 : 16) என்ற ஆலோசனையை நம்முன் வைக்கிறபடியால் இம்முறை அவைகளைக் குறித்து சிந்திக்க முனைப்புடன் முற்படுவோம்.

## I. ஏன் நாழிகையை நழுவவிடக்கூடாது?

மனிதனுக்கு தேவனால் வரையறுக்கப்பட்டு ஈவாகக் கொடுக்கப்பட்ட தன்னிகரில்லா தானமாய் காலம் விளங்குகிறது. ஸ்தீரியினிடத்தில் பிறந்தவனின் சஞ்சலமிகு வாழ்க்கையின் கால அளவு எழுபது வருடம் பெலத்தின் மிகுதியால் எண்பது வருடம் என்று 90வது சங்கீதத்திலே மோசே இயம்புகிறார். மேலும் மனிதனின் ஜீவியத்தை குறித்து வேதாகமம் இப்படியாய் விளம்புகிறது. நெய்கிறவன் எரிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடும் என்றும் (யோபு 7 : 6) நிழலைப் போன்றதென்றும் (யோபு 8 : 9) அஞ்சற்காரர் ஓட்டத்தைவிட தீவிரமானதென்றும் (யோபு 9 : 25) புகையைப் போன்றதென்றும் (யாக்.4 : 14) கதையைப் போன்றதென்றும் (சங். 90 : 9) அதன் சுருக்கத்தை வெகுவாய் விவரிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் வைகறை விடியலின் வெளிச்சத்தைக் கண்டு காலையில் மலரும் புஷ்பத்தைப் போலும், ஆதவன் மறைவால் வாடிப்போகின்ற மலரைப்போலவும் குறுகினதாய் திகழ்கிறது. ஆனால் இதில் என்ன சஞ்சலமென்றால் குறிப்பிட்ட நேரத்தில் துவங்கிய நம் வாழ்க்கை என்று தன் முடிவுரையை முழங்குமென்று தெரியாததுதான்.

20-ம் நூற்றாண்டில் அகிலத்தின் அறிவுத்திறனை நோக்குவோமானால் வான்முகில் முட்ட உயர்ந்து நிற்கும் சிகரத்தைப் போல் வளர்ந்து நிற்கிறது. இவ்வளர்ச்சிக்கு நாம் ஈடுகொடுக்க வேண்டுமென்றால் நாழிகையை வீணாக்காமல் பலன்தர அதை பயன்படுத்துதல் வேண்டும். கர்த்தரால் நம் கரத்தில் கொடுக்கப்பட்ட காலத்தினை நாம் பயன்படுத்தாது தண்ணீரெனக் கருதி சிந்தி விடுவோமானால், அதை மீண்டும் அள்ளிக் கொள்ள செந்நீர் சொறிந்து முயற்சிக்க வேண்டுமென்பதால், அதை இப்பொழுதே சீராய் செலவிடுதல் வேண்டும்.

வேதாகம பக்கங்களை நாம் புரட்டிப் பார்ப்போமானால், கர்த்தர் காலந்தாழ்த்துவதை அறவே வெறுக்கிறார் என்பதை புரிந்து கொள்ள இயலும். இயேசு தமது சீடர்களை இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பும்போது அவர்களை அவ்வீட்டார் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பாதங்களில் படிந்திருக்கும் தூசியை உதறிவிட்டு அடுத்த பட்டணங்களுக்குப் போங்களென்றுரைத்தார். (மத். 10 : 14) அவர் சொல்லுவதிலும் ஒரு நோக்கமுண்டு. சிஷர்கள், தங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களைப் பற்றி யோசிக்கலானால், சோர்ந்து அடுத்தப் பட்டணங்களில் கர்த்தரின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும் ஆத்துமாக்களை சந்திக்காமல் போகவும், காலம் தாழ்த்துவதால் அவ்வாத்துமாக்களை இழந்து போகவும் வாய்ப்புண்டு. ஆகவேதான், தோல்வியைக் குறித்து யோசித்து துவண்டு போய் கவலையால் காலத்தை வீணாக்காமல் தொடர்ந்து செயல்பட எம்பெருமான் இயேசு வலியுறுத்துகிறார்.

வாலிபர்களாகிய நாம் சில வேளைகளில் தோல்வியைக் கண்டு சோர்ந்து போகிறோம். காலம் கடந்து விட்டதே என்று யோசித்து பல நேரங்களில் நாம் கண்ணீர் சிந்துகிறோம். வாலிபனே! காலத்தைப் பிரயோஜனப்படுத்தாமல் தோல்விகண்டாயோ? அடுத்துவரும் வாய்ப்பினை நீ பார்க்க முடியாதபடி, உன் விழிகளை கண்ணீரால் நிரப்பாதே. வெற்றியை இலக்காக வைத்து அதை அடையும் வரை இமைக்கு உறக்கம் கொடாதே. காலத்தை வீணாக்காமல் ஒரே தேவனைத் தேடு, வெற்றி காவியம் உருவாக்க அவர் துணை நாடு. அப்படிச் செய்கையில் கண்டிப்பாய் கர்த்தர் உன்னுடன் இருப்பார்.

### II. காலத்தை எப்படி பிரயோஜனப் படுத்துவது?

நமது வாழ்க்கையில் அளவைக் குறித்து அறிந்த நாம், அது மிகக் குறைவென்றதாலும், அது முடியும் நேரம் மறைக்கப்பட்டிருக்கிறது என்றதாலும், நாசியில் சுவாசம் நின்றுபோன நாழிகைக்குப் பின் மறுமையின் வாழ்க்கை இருக்கிறது என்பதை உணர்ந்து, அவ்வுலக வாழ்க்கையை இவ்வையகத்தின் வாழ்வை மையமாகக் கொண்டு அமைந்திருப்பது அறிந்து மீட்பைக் குறித்தான காரியத்தில் போர்கால நடிவடிக்கையை மேற்கொள்ளல் அவசியம்.

இறைவனின் இன்றியமையாத வேதத்தில் நமது மீட்பைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் நவில்கையில் "..... இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்" (2 கொரி.6 : 2) என்று வரிசுத்தமாய் மொழிகிறார். ஆகவே, ஆத்மீக யாத்திரையில் நாம் வேதம் சொல்வதைக் கேட்பதில், காலம் தாழ்த்துவது இத்தரணியின் ஜீவியத்தோடு நில்லாமல் தனது பாதிப்பை நித்தியம் வரை நீடிப்பதால், ஆபத்து அதிகம் என்றுணர்ந்து இந்த இளம்பிராயத்தில் நமக்களிக்கப்பட்டிருக்கும் கிருபையின் காலத்தைப் பிரயோஜனப்படுத்துவோம்.

ஆதித் திருச்சபையின் சரித்திரத்தைத் தன் பக்கங்களில் எழில்மிகு வண்ணமாய் ஏந்திநிற்கும் அப்போஸ்தலர் செயல்பாட்டு நூலில் இரட்சிப்படைய வேண்டியதின் அவசியத்தையும், அவசரத்தையும் விளக்குமோர் உதாரணத்தை உற்றுநோக்குவோம். பிலிப்பு பட்டணத்தின் சிறைச்சாலைக்காரனின் வீட்டில், தேனிலும் தெளித்தேனிலும் மதுரமான கர்த்தருடைய வசனத்தை பவுலும், சீலாவும் போதித்தார்கள். அதைக்கேட்ட அவ்வீட்டார் இரட்சிக்கப்படுவதின் அவசரத்தை உணர்ந்து காரிருள் என்றும் கருதாமல் உடனே திருமுழுக்குப் பெற்றார்கள்(அப்.16 : 23-33). இரட்சிப்பின் சுவிசேஷத்தை இன்று கேள்விப்படுகிற நாமும் சிற்றின்பத்தின் மீதுள்ள மோகத்தால் இன்னும் கொஞ்சம் நாளாகட்டும் என்று பேலிக்ஸைப் போல் பிசாசுக்கு செவிகொடாமல் (அப். 24 : 3) கர்த்தருக்கே கீழ்ப்படிவோம்.


இந்த விடுமுறை நாட்களை வேதம் வாசிப்பதிலும், ஆவிக்குரிய நூல்களைப் படித்து தியானிப்பதிலும், விடுமுறை வேதாகமப் பள்ளிக்குச் செல்லுவதிலும், ஆன்மீக கூட்டங்களில் கலந்து கொள்ளுவதிலும்(8-ம் பக்கம் பார்க்க) அஞ்சல் வழியாய் வேதத்தை பயிலுவதிலும் (விலாசத்திற்கு பின் அட்டையைப் பார்க்கவும்) செலவிடுவோமானால் அது சாலச் சிறந்ததாக அமையும். நமக்கு உலகக் கல்வியும், அறிவும் மிக அவசியமானதால் அறிவுப் பசியுடையவர்களாய் நூலகம் சென்று தரமான நூல்கள் எதையரினும் கைகளில் ஏற்றிக் கொண்டு காரியங்களைக் கண்வழியாய் செலுத்தி கருத்தறையில் அமர்த்தல் நன்று.

நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நாளும் உறங்கி ஓய்வெடுக்கப்போகுமுன் நம் அறிவுக் களஞ்சியத்தில் புதிதாக சத்துள்ள சிந்தனைகளும், கருத்துக்களும், விசயங்களும் சேர்ந்திருக்கிறதா என்றெண்ணி, சேராவிடில் சேர்த்து, பின்பு படுத்தால் அறிவு வளர்வது அதிநிச்சயம். இதையே ஆவிக்குரிய வாழ்விலும் பின்பற்றலாம். கர்த்தரைப் பற்றி இன்றென்ன நான் கற்றேன் என யோசித்து, வேதம் வாசித்து, அறிவைப் பெற யாசித்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற ஜோதிகளின் பிதா நமக்கும் அளவில்லாமல் பரத்தின் ஞானத்தை பாரபட்சமின்றி தருவார் என்பதில் ஐயமில்லை. ஆகவே எனக்கன்பானவர்களே! காலத்தை வீணாய் கழிக்காமல் கர்த்தரிடத்தில் சேர்ந்து ஆசி பல பெறுவோமாக!

ஜே. பிக்கின்ஸ்

# நோவாவின் பரிசோதனை

எனக்கு பிரியமான சிறுதம்பி தங்கைகளே உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மாதத்தின் அறிவுரை உங்களுக்கு பேருதவியாய் இருந்திருக்கும் என நம்புகிறேன். இம்மாதமும் ஓர் அரிய உண்மையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். கவனியுங்கள்.



உங்களுக்கு நோவா தாத்தாவைப் பற்றித் தெரியும் என நம்புகிறேன். அவர் ஒரு சிறந்த கப்பல் கட்டுபவராக இருந்தார். அவர் வாழ்ந்த போது, தேவன் 40 நாட்களுக்கு பூமியின் மீது மழையை வரப் பண்ணினார். அப்போது நோவா தாத்தாவின் குடும்பத்தை மட்டும் தேவன் காப்பாற்றினார். அவர்கள் பேழைக்கு உள்ளாக சென்று பூமியின் மேல் தண்ணீர் வற்றும் வரைக்கும் எட்டு மாதங்கள் அதற்குள்ளேயே இருந்தார்கள்.

சரி, அந்த நோவாதாத்தாவைப் பற்றி இன்னொரு காரியம் உங்களுக்குத் தெரியுமா? அவர் ஒரு நல்ல விஞ்ஞானியும் கூட. எப்படியென்று தானே நினைக் கிறீர்கள்? தொடர்ந்து படியுங்கள். மழை பெய்து பேழை அரராத் மலையின் மேல் தங்கின போது, சில நாட்கள் கழித்து நோவா தாத்தா சில சோதனைகளை நடத்தினான். (ஆதி 8:1-12 படியுங்கள். அவர் இரண்டு பறவைகளை சோதனைக்காக தெரிந்து கொண்டார். ஒன்று, கருமை நிறம் கொண்ட பெரிய **காகம்,** இரண்டு, மென்மையான **புறா.**

ஏன் இந்த பறவைகளை தெரிந்து கொண்டார் என்று எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? இதற்கான விடையை கீழே தொடர்ந்து படிக்கும் போது நாம் தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக காகங்கள் இறந்து போன மிருகங்களின் மாம்சத்தை தான் உட்கொள்ளும். ஆனால் மென் மையான புறாக்களோ பழங் களையும், தானியங்களையும் உட்கொள்ளும். இந்த வேறுபாடு களின் அடிப்படையில் நோவா விற்கு அந்த இரு பறவைகளும் வெவ்வேறு தகவல்களை கொடுத் தன. **காகம் பேழையை விட்டு வெளியே சென்றது. அது அங்கும் இங்குமாக சுற்றிக் கொண்டே இருந்தது. அந்த காகம் நோவா விற்கு பூமியின் அப்போதைய நிலைமையை அறிந்து கொள்ள உதவியது. அதெப்படியென்றால், மேலும் நிறைய இறந்து போன மிருகங்களின் சடலங்கள் தண் ணீரில் மிதப்பதால் அது திரும்பவில்லை. பிறகு, புறா வெளியே சென்ற போது சிறிது தூரம் அலைந்து திரும்பியது. இதினாலேயே பூமியின் மேல் தண்ணீர் இருப்பதை நோவா உணர்ந்து கொண்டான்.**

ஏழு நாட்கள் கழித்து நோவா மறுபடியும் புறாவை வெளியே விட்டான். இந்த முறை புறா ஒரு ஒலிவ இலையை தனது வாயில் எடுத்து வந்தது. இதினாலே மரங்கள் நீரின் மட்டத்திற்கு வெளியே உள்ளதை உணர்ந்து கொண்டான்.

நோவா மேலும் ஏழு நாட்கள் கழித்து புறாவை வெளியே விட்டான். அது திரும்ப வில்லை. இதினாலே பூமியின் மீது தண்ணீர் வற்றியது என அறிந்தான். அந்த புறா ... தனக்கு உணவையும், தனக்கு ஒரு கூட்டையும் பேழைக்கு வெளியே கட்டிக் கொள்ள முடியும என அறிந்தான்.

தானாகவே பார்க்காமல் பேழைக்கு வெளியே இருந்த உலகின் நிலையை அறிய **நோவா வின் சோதனைகள் உதவின.** அந்த சோதனைகள் அவனுக்கு செய்திகளை கொடுத் தாலும் அவன் எப்பொழுது வெளியே வர முடியும் என்று அவைகளால் உணர்த்த முடிய வில்லை. **அவன் தேவனுடைய கட்டளைகளுக்கு காத்திருக்க வேண்டியதாயிருந்தது.** (ஆதி 8 : 16) இன்றைக்கு இருக்கிற **விஞ்ஞானி களின் நிலையும் அதுதான்.** அவர்கள் இயற்கை யோடு சில சோதனைகளை நடத்தி அதை நாம் அறிந்து கொள்ளும்படி செய்கி றார்கள். ஆனால் சில காரியங் களை இப்படித்தான் என்று அவர்களால் கூற முடியாது. **சில செய்திகள் தேவனிடத்தில் இருந்து மட்டும் தான் வரும். வர வேண்டும்.** ஆகவே தேவனே எல்லாரிலும், எல்லாவற்றிலும் பெரியவர் அவருக்குப் பயந்து நடப்பதே நன்மையானது. ஆசீர்வாதமானது.

சிறு பிள்ளைகளாகிய நாம் இந்த இளம் பிராயத்தில் இப்படிப்பட்ட உண்மையை மனதில் வைத்து நம்முடைய வாழ்க்கையை நடத்தப் பழக வேண்டும். அப்படி செய்வோமா?

**R. Abel Rodger Nayagam**

# பிலிப்பியர் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலன் பவுல்

காலம் : சுமார் கி.பி. 62

## இந்நூல் மற்றும் பட்டணம் பற்றி

1. இதுவும் நான்கு சிறை நிருபங்களில் ஒன்று
2. இது ஒரு "அன்பின் கடிதம்" பிரச்சினைகளினிமித்தம் எழுதப்படாமல், அன்பு, நட்பு, நன்றி ஆகியவைகளினிமித்தம் எழுதப்பட்டது.
3. "கிறிஸ்து இயேசுவுக்குள்" எனும் சொற்றொடர், இந்நூலில் எட்டுமுறை இடம் பெற்றுள்ளது.
4. சந்தோஷம், மகிழ்ச்சி ஆகிய வார்த்தைகள் 16 முறை இடம் பெற்றுள்ளது.
5. பவுலின் நாட்களில் இப்பட்டணம் வளமிக்க ரோமக் காலனியாக இருந்தது.
6. மகா அலெக்சாண்டரின் தகப்பன் பிலிப், இப்பட்டணத்தைப் பிடித்து, அதைக் கட்டி அதற்குத் தன் பெயரை இட்டான்.
7. பவுலின் இரண்டாவது நற்செய்திப் பயணத்தின் போது, இங்கு சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்.16).

## இந்நூலின் செய்தி

1. கிறிஸ்து நம்முடைய ஜீவனாகவும் (1:2), நம்முடைய முன்மாதிரியாகவும் (2:5), நம்முடைய நம்பிக்கையாகவும் (3:8). நம்முடைய பெலனாகவும் (4:13) இருக்கிறார்.
2. எந்த சூழலிலும் ஒரு கிறிஸ்தவனால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் (அப். 16 : 25, பிலி.4 : 4-7)
3. கிறிஸ்துவின் சுவிசேஷமாக மாறுகின்ற அளவில் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும் (பிலி.1:27, மத்.5:13-16)
4. கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக் கொள்ள நாம் ஒவ்வொருவரும் பிரயாசை எடுக்க வேண்டும் (2:1-11)
5. பிலிப்பியர் பவுலடியாரை ஊழியத்தில் தாங்கியது போல், ஊழியர்களைத் தாங்கும் பொறுப்பு சபைக்கு உண்டு (4:10-19)

# எது புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் ?

பவுல் சொல்லுகிறார், அற்புதங்கள் செய்யக் கூடிய வரங்கள் ஒருநாள் முடிவுக்கு வருமென்று. அவைகள் நித்தியமானவைகளல்ல. முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலன்களுடைய கால கட்டத்திலேயே அவைகள் முடிவுக்கு வந்துவிட்டன.

ஒரு வேளை, இது உண்மையாக இருந்தால், இன்றைக்கு அற்புதங்கள் செய்கிற வரங்கள் தங்களுக்குண்டு என்று சொல்லுபவர்கள், தங்களை ஏமாற்றிக் கொண்டு மற்றவர்களையும் ஏமாற்றுபவர்கள் என்று தானே அர்த்தம். அநேக காரியங்கள் போலியானவைகள் சிலர் இதை உண்மையென்று உத்தமமாய் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலருக்கு எது உண்மையான அற்புதங்கள் செய்யும் வரம், எது பொய்யான அற்புத வரம் என்றே புரியாமலிருக்கிறது. ஆகவே சில விளக்கங்களைப் பார்ப்போம்.

சிலர், ஆச்சரியமான நிகழ்வுகளை, 'அற்புதம்' என்கின்றனர். மிகவும் வியாதியாயிருக்கிற ஒருவர், மருந்து சாப்பிட்டு அல்லது அறுவை சிகிச்சை செய்யப்பட்டு சுகமடைவதை இவர்கள் அற்புதம் (Miracle) என்கின்றனர். இன்றைய தற்கால அற்புத நிகழ்வுகளுக்கும், பரிசுத்த வேதாகம அற்புத நிகழ்வுகளுக்கும் வித்தியாசமுண்டு என்பதை அநேகர் புரிந்து கொள்வதில்லை. பரிசுத்த வேதாகமத்தில், அற்புதங்களை அடையாளங்கள், அற்புதங்கள், பலத்த செயல்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவை எல்லாமே ஏதோ ஒன்றை சுட்டி காண்பித்து சாட்சியிடுகின்றன.

அற்புதங்கள் என்றால், இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள். பரிசுத்த வேதாகமத்து அற்புதங்களுடைய பிரதானமான நோக்கம் ஒன்றை உறுதிபடுத்த (Confirm) இது உண்மை வசனம் உறுதிபடுத்தப்பட (மத்.9; 4-5; மாற்கு. 2; 10-11 யோவான்.21;24, 25. அப்.2 ; 32-33).

எபிரேய எழுத்தாளர் மிக அருமையாக சொல்லுகிறார். "தேவன் தாமே உறுதிபடுத்தி சாட்சி கொடுத்திருக்கிற இரட்சிப்பை விட்டு விலகினால் தப்பித்துக் கொண்டால் தண்டனைக்கு எப்படித் தப்புவோம்" (எபி.2; 3-4). ஆகவே அற்புதங்கள், அவர்களுடைய (இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்கள்) செய்தியோடு வந்ததன் காரணம் வசனம் உறுதிபடுத்தப்பட (மாற்கு. 16; 17). மேலும் அற்புதங்களுடைய அடிப்படை நோக்கம், விசுவாசத்தை உண்டுபண்ணுதல் (யோவான்.20; 30-31) நோயாளிகள் மீது காட்டப்படும் இரக்கத்தினால், பரிதாபத்தினால் அற்புதங்கள் செய்யப்படுகிறதென்பது தவறான கருத்து. அல்லது பட்டினியினால் வாடும் பரிதாபத்தினால் செய்யப்படுகிறது. ஒரு வேளை புதிய ஏற்பாட்டிலும் இப்படிப்பட்ட நோக்கமிருந்தாலும் அதுவே

பிரதானமானதல்ல அவை இரண்டாம் பட்சமானதே. இதற்காக அநேக அற்புதங்கள் செய்யப்படவில்லை.

**உதாரணமாக :**

| | | |
|---|---|---|
| பவுல் | : | மாம்சத்திலுள்ள முள்ளுடன் விடப்பட்டார். |
| லாசரு | : | இவர் மட்டுமே மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டார். அநேகர் மரித்திருந்தும் கூட |
| பெத்சாயிதாவில் | : | ஒரே ஒரு வியாதியஸ்தன் மட்டுமே சொஸ்தமாக்கப்பட்டான். இதை போலவே இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்களால் வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கக் கூடாமல் இருக்கிறது. இதிலிருந்து நமக்கு ஒன்று நிச்சயம். அற்புதங்களுடைய பிரதானமான நோக்கம் வசனம் உறுதிப்படுத்தப்படுவதற்கு என்பது தெளிவாகிறது. |

சுவிசேஷம் உறுதிபடுத்தப்பட்டவுடன் (இயேசுவே தேவனுடைய குமாரன் என்று உறுதிப்படுத்தப்பட்டவுடன்) அற்புதம் செய்யப்படும் வரம் படிப்படியாக மறைந்து முடிவுக்கு வந்து விட்டது.

அப்போஸ்தலருடைய நடவடிக்கை புத்தகத்தில், முதல் பாதியில் அநேக அற்புதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. முதல் பாதையில் 28 அற்புதங்களும் பிற்பாதியில் வெறும் 9 அற்புதங்களும் குறிக்கப்பட்டிருக்கிறது. இது அற்புதங்களுடைய அநேக்கம் (வசனம் உறுதிப்படுத்தப்பட்டதும்) நிறைவானதும் படிப்படியாக மறைந்து போனதற்கான ஆதாரமாக திகழ்கின்றது. அதிக உறுதியான வசனம் நமக்கிருக்கும் போது அற்புதங்கள் இங்கு அவசியமற்றதாய் போனது. அடுத்தபடியாக, இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் அற்புதங்கள் செய்து கொண்டிருந்த அதே காலக்கட்டத்தில், மாய வித்தைக் காரர்களும் (Pagan Wonder Workers) இருந்தார்கள். அன்றைய காலக் கட்டத்தில் அவர்களுக்கும் ஜனங்கள் மத்தியில் அதிக மதிப்பிருந்தது.

மாய வித்தைக்காரனாகிய சீமோன். இவன் ஜனங்களை பிரமிக்க வைத்தான் (அப். 8 ; 9-11) இவன் கீர்த்தி தேசமெங்கும் பரவியிருந்தது. "தேவனுடைய பெரிதான சக்தி" இவன் தான் என்று மக்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால், "பிலிப்பு" செய்த அற்புதங்கள் இவன் செய்த சில மாய வித்தைகளை பார்க்கிலும் பலத்தவைகளாக இருந்ததினால் இவனும் ஞானஸ்நானம் பெற போனான். அடுத்து, "எலிமா" இவன் அப்போஸ்தலனாகிய பவுலோடு ஒப்பிட்டு பேசப்பட்டான் (அப்.13;2-10). இவர்களெல்லாருமே, பரிசுத்த ஆவியானவரின் உண்மை

அற்புதங்களோடு ஒப்பிட முடியாத ஏதோ சில வித்தைகள் (Tricks) செய்து மக்களை ஏமாற்றி பணம், புகழ் சம்பாதித்து வந்தனர் இன்றும் இயேசுவின் பெயரை பயன்படுத்தி இதையே செய்து வருகின்றனர்.

**தேவனுடைய அற்புதங்களுக்கும், மாய வித்தைகளுக்குமுள்ள சில வித்தியாசங்கள் :**

**முதலாவது :** புதிய ஏற்பாட்டு அற்புதங்கள், சூழ்நிலைகளை உருவாக்கி, மனதை மயக்கி செய்யப்படவில்லை.

புறஜாதிகளின் அற்புதங்கள் மருந்துகள், மாய வித்தைகள், இசைக் கருவிகளைக் கொண்டு ஏற்படுத்தும் மயக்க நிலை ஆகியவைகளைக் கொண்டு செய்யப்பட்டது.

**இரண்டாவது :** பலன்களில் வித்தியாசம் காணப்பட்டது. புதிய ஏற்பாட்டு அற்புதங்களில் 100 சதவீதம் வெற்றி.

புறஜாதிகளின் மாயவித்தை அநேக சமயங்களில் தோற்று போயுள்ளது. பெரும்பாலும் மனோ ரீதியான வியாதியஸ்தர்களே சொஸ்தமாக்கப் பட்டனர் இன்றும் அவ்விதமாகவே சொஸ்தமாக்கப்படுகின்றனர்.

**மூன்றாவதாக :** புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் செய்யப்பட்டதன் நோக்கம் தேவனுடைய வார்த்தை உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் புறஜாதிகளின் மாயவித்தைகளின் நோக்கம் பணம் சம்பாதிப்பதாகவே இருந்தது. இன்றைக்கும் அப்படியே இருக்கிறது.

**இன்றைய அற்புதங்களை செய்பவர்களின் தவறுகள்**

**முதலாவதாக:** வசனம் முழுமையாக பூரணமாக வெளிப்படுத்தப்பட்டதை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இன்றைக்கும் அற்புதங்கள் செய்கிறோமென்று சொன்னால் வசனம் இன்னும் முழுமையாக்கப்படவில்லையென்று அர்த்தம். இவர்கள் மத்தியில் ஒரு தீர்க்கதரிசியிருப்பார். அவர் வேதாகமத்துடன் இன்னும் அநேக காரியங்களை சேர்த்துக் கொண்டே வருவார். ஆனால் ஆண்டவருடைய வசனம் சொல்லுகிறது "புதிய ஏற்பாடு முழுமையானது" நம்முடைய ஆவிக்குரிய தேவைகளுக்கு போதுமானது (1.பேதுரு.1;3) ஜீவனுக்கும் வல்லமைக்கும் யாவற்றிற்கும் போதுமானது.

**இரண்டாவதாக :** கிறிஸ்தவத்தின் தனித்தன்மையை இது சீர்குலைக்கிறது. மந்திரம், ஆவியின் உலகம், இன்னும் சில மத கும்பல்களைப் போல இதுவும் மாறி தனித்தன்மை பாழ்பட்டுப் போய் விடுகிறது.

**மூன்றாவதாக :** யுத்தம், பொருளாதார பிரச்சனைகள், பாவ குற்ற உணர்வுகளால் ஏற்படும் குழப்பங்களில் மக்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் தேடி அலைகின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தையின் மூலம் வழியை கண்டு பிடிப்பதை விட்டு விடுகின்றனர். தேவன் இதை கண்டிக்கிறார்.

**நான்காவதாக :** இந்த மாயவித்தையாகிய அற்புதங்களை செய்கிறவர்கள் தேவனுடைய தன்னிகரற்ற தனித்தன்மையை கேள்வி குறியாக்குகின்றனர். தேவன் ஒழுங்கும் கிரமுமானவர். குழப்பத்திற்கு அவர் காரணரல்லர் (1. கொரி.14; 33). அநேக நாம காரண கூட்டத்து பிரிவுகள் வெவ்வேறு போதனைகளை போதிக்கிறது. குழப்பம், பிரிவு, கலகம் உண்டாக்குபவை. இதை நாம் கண்டிப்பாக ஏற்கக் கூடாது.

**ஐந்தாவதாக :** விசுவாசித்து நடக்கும் தேவனுடைய திட்டத்திற்கு மாறாக இது காணப்படுகிறது. (2. கொரி, 5 ; 7) தேவ வார்த்தை உறுதியாக்கப்பட்டவுடன் சபை குழந்தையாக இருந்து பூரண வளர்ச்சிக்கு வளர வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். (1. கொரி. 13; 8-13). அவருடைய வார்த்தைகளை எடுத்துக் கொண்டு விசுவாசித்து நடக்க வேண்டும். ஆனால் அற்புத அடையாளங்களை தேடி நடக்க அவர் (தேவன்) சொல்லவில்லை.

இப்படிப்பட்ட காரண காரியங்களால் நாம் கண்டிப்பாக இதை ஏற்க கூடாது. இன்றைக்கு நமக்குத் தேவை 'புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவம்' புதிய ஏற்பாடு தேவனுடைய வார்த்தைகளால் வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

"கிறிஸ்துவின் சபையார்" இதைத்தான் உலககெங்கிலும் அறிவித்து வருகிறார்கள். இரட்சிப்பின் செய்தியை உலகிற்கு அறிவிப்பதே இவர்களின் நோக்கம். போலியான அற்புதங்களை செய்து பணத்தை சம்பாதிப்பது நோக்கமல்ல.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் (ரோமா.6; 23 எபேசியர் .2;9-10). இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.


ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் (எபே.2;10).

தமிழில். **தானியேல்துரைராஜன்**
திருச்சி.

## நன்றி

**மே, 5-7, 2003** ஆகிய நாட்களில், வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் நடந்த எங்களது **ஆறாவது வேனிற்கால வேதாகம முகாமில்** தமிழகம், ஆந்திரம் மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 45 பிராந்திய சபைகளைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இம்முகாமுக்காக ஜெபித்த, கொடுத்த அனைவருக்கும் நன்றி.


**- ஆசிரியர்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible***
***Correspondence Courses,***
***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED **BY** THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Dell
Annual Subscription Rs. 30/

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by Church of Christ, Kangayam
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S. Rajanayagam